பக்கங்கள்: எட்டு

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 11 வியாழக்கிழமை (26-12-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:30

# தேவகௌடாவுடன் சந்திரிகா பேசுவார்!

## இலங்கை இனப்பிரச்சினை குறித்து

கொழும்பு, டிசம்பர் 26

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டே இந்தியா சென்றிருப்பதாக அறிவிக்கப் பட்ட போதிலும் --

அங்கு இந்தியப் பிரதமர் தேவகௌடாவுடன் அவர் உத்தி யோகப்பற்றற்ற முறையில் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்பது நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் திடீர் விஜயம் கொழும்பு மற்றும் புதுடில்லி அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது தெரிந்ததே.

எதிர்வரும் திங்கட்கிழமை வரை இந்தியாவில் தங்கியிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா அங்கு இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேசுவார் என்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு சென்று நேரில் பேசுவதற்கு

# புலிகள் பதிலை எதிர்பார்த்து காத்திருக்கின்றார் ரூபசிங்க!

கொழும்பு, டிச. 26

முல்லைத்தீவுக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக விடுதலைப் புலிகளின் பதிலை எதிர்பார்த்து ''சர்வதேச அலேர்ட்'' அமைப்பின் இணைப்பாளர் குமார் ரூபசிங்க கொழும்பில் காத்திருக்கின்றார் என்று ''மிட்வீக் மிரர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் சாதகமான பதில் அவருக்குக் கிடைக்கும் என நம்பப்படுவதாகவும் —

விடுதலைப் புலிகளின் பதில்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தெற்கில் உள்ளூராட்சி தேர்தல் மார்ச்சில் நடத்தத் தீர்மானம்?

கொழும்பு, டிச. 26

தெற்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை மார்ச் மாதத்தில் நடத்துவதற்கு அரச உயர்மட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்வதற்கான திகதிகள், தேர்தல் நடைபெறும் திகதிகள் ஆகியவை குறித்து முடிவு செய்வதற்காக தேர்தல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அழைத்து ஆலோசனை நடத்தியிருப்ப

(8 ஆம் பக்கம் பார்க்க)

# உள்ளூராட்சித்தேர்தல்களால் ஆளும் கூட்டணியில் பிளவு?

கொழும்பு, டிச. 26

தென்னிலங்கையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்ற போதிலும் —

அதற்கு ஒரே அணியில் நின்று முகம் கொடுக்க முடியாத குழப்ப நிலையில் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இருப்பதாக கொழும்பு அரசியல் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வேட்பாளர் தெரிவின் போது, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடம் பெற்றுள்ள பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தங்களை ஒதுக்கி கபளீகரம் செய்து விடும் என முன்னணியில் உள்ள ஏனைய சிறிய கட்சிகள் அஞ்சுகின்றனவாம்.

### லலித் அணி

பொதுத்தேர்தலில் தமது கட்சி வேட்பாளர்களுக்கு ஏழரை லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்திருப்பதைச் சுட்டிக்காட்டும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவி ஸ்ரீமாணி அத்துலத்முதலி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மலையக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிட முடிவு

கொழும்பு, டிச. 26

உள்ளூராட்சித் தேர்தல்களில் மலையகத்தில் தமது முன்னணி தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் உப- தலைவர் வி. ரி. தர்மலிங்கம் தெரிவித்தார்.

மலையகத்தில் தமது கட்சி மேற்கொள்ளத் திட்டமிடும் அபிவிருத்தித் திட்டங்களை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணைந்து தடைசெய்யும் செயற்பாட்டில் இறங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தமது முன்னணி தனித்துப் போட்டியிட்டு தமது மக்களுக்காகப் போராடும் என்றும் அவர் கூறினார்.

இந்த முன்னணியின் தலைவரும் அதன் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை நிலைமை: பாப்பரசர் கவலை

## தமிழ், சிங்களத்தில் வாழ்த்து

வத்திக்கான், டிச. 26

இலங்கையில் நடைபெறும் வன்செயல்கள், நாசகார நிகழ்வுகள் குறித்து புனித பாப்பாண்டவர் கவலை வெளியிட்டுள்ளார்.

நத்தார் தினத்தை முன்னிட்டு வத்திக்கானில் இருந்து ஆற்றிய உரையிலேயே அவர் தமது கவலையை வெளியிட்டார்.

உலகில் இன்னமும் ஆயுதங்கள் மனித வாழ்வுக்கும் சமாதானத்துக்கும் உலை வைக்கும் நிலை நீடிப்பதாகவும், அந்நிலை நீங்க உலக மக்கள் எல்லோரும் பாடுபட வேண்டும் எனவும் பாப்பரசர் கூறினார்.

உலக மக்கள் தமக்கிடையே உள்ள பகைமையையும், குரோதத்தையும் ஒழித்து பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

எல்லா மக்களுக்கும் சமாதானமும், மகிழ்ச்சியும் கிடைக்கத் தாம் பிரார்த்திப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# 4 படையினர் பலி!

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். குடாநாட்டில் தாங்கள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இரண்டு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த சனியன்று சுழிபுரம் சந்திப் பகுதியில் தமது தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் ஒருவர் காயமடைந்ததாகவும் —

தமது தரப்பில் இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்றும் —

நேற்று முன்தினம் காலை 6.35 மணியளவில் மானிப்பாய் ஆலடிச் சந்தைப் பகுதியில் தாங்கள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு சிப்பாய் பலியாக, மற்றொருவர் காயமுற்றார் என்றும் —

புலிகள் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

# இதுவரை 25 இலட்சம் பனை மரங்கள் அழிவு!

கொழும்பு, டிச. 26

வடக்கு யுத்தத்தினால் இதுவரை 25 இலட்சம் பனை மரங்கள் அழிந்துள்ளன.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் எம். பாக்கியநாதன் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்ட விஜயத்தை அடுத்து இந்தத் தகவல் வெளியாகியுள்ளதாக கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

பனை அபிவிருத்திச் சபைக்குக் கிடைத்துள்ள விவரங்களின்படி யாழ்ப்பாணத்தில் மட்டும் 15 இலட்சம் பனைமரங்கள் தறிக்கப்பட்டுள்ளன.

பனை மரங்களைத் தறிப்பது குற்றமென வர்த்தமானி அறிவித்தல் ஒன்று தெரிவிக்கிறது. ஆனால் பாதுகாப்புத் தேவைகளுக்காக படையினரும் பனை மரங்களைத் தறித்துவருகின்றனர்.

— இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்தது

இதே வேளை —

குடாநாட்டில் அழிக்கப்பட்ட பனைகளை ஈடுசெய்வதற்கு பூர்வாங்க நடவடிக்கையாக இரண்டு லட்சம் பனம் விதைகளை நடுவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-10)

## முச்சந்தி முரளி



அப்ப........ ஒரு புறம் விதைப்பு; மறுபுறம் தறிப்பு எண்டு சொல்லுங்கோவன்...!

# கொண்டாட்ட காலத்தில் கொழும்பில் பாதுகாப்பு

கொழும்பு, டிச. 26

நத்தார் மற்றும் புதுவருடக் கொண்டாட்டங்களை ஒட்டி தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

முடிச்சுமாறிகள், பிக்பொக்கற்காரர்கள் போன்ற கிரிமினல்களின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக ஒரு புறத்திலும்—

விடுதலைப் புலிகளின் தாக்குதல் ஏதும் இடம்பெறாமல் செய்வதற்கு மறுபுறத்திலும் —

பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொண்டாட்டத்தை ஒட்டி தலைநகர் வீதிகளில் மக்கள் கூட்டமாக நடமாடுவதையும் —

பரிசுப் பொருள்களைப் பொதி செய்து மக்கள் தம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்திலிருந்து

# இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு அந்த இடத்திலேயே பாடசாலைகள்

## முல்லை, கிளிநொச்சி, வவுனியாவில் அமையும்

கொழும்பு, டிச. 26

வவுனியா மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ள—யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த — 10 ஆயிரம் மாணவர்களுக்கும் கல்வி பயில ஒன்பது பதில் நிரந்தர பாடசாலைகளை அமைக்க மாகாணக் கல்வியமைச்சு ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

வவுனியாவில் தற்காலிகமாகத் தங்கியுள்ள ஐந்நூறுக்கும் அறுநூறுக்கும் இடையிலான ஆசிரியர்களையும் அப்பாடசாலைகளில் கல்வி போதிக்க நியமிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த 4 கோடி ரூபாவை ஒதுக்குமாறு மத்திய கல்வியமைச்சை மாகாண கல்வியமைச்சு கோரியுள்ளது.

இதேபோல கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் தங்கியுள்ள 45 ஆயிரம் இடம்பெயர்ந்த மாணவர்களும் கல்விபயில பதில் நிரந்தரப் பாடசாலைகளை அமைக்க புள்ளி விவரங்களை மாகாண கல்வியமைச்சு கோரியுள்ளது. (உ-3-150)

## முதலாவது டெஸ்ட் ஆரம்பம்

டர்பன், டிச. 26

தென்னாபிரிக்க — இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டம் தென்னாபிரிக்க நகரான டர்பனில் இன்று ஆரம்பமாகின்றது.

டெண்டுல்கர் தலைமையில் இந்திய அணி வெளிநாடு ஒன்றில் விளையாடுவது இதுவே முதல் தடவையாகும்.

தென் ஆபிரிக்க அணியில் ஜொன்டி றோட்ஸ், டி விவிலியர்ஸ், சிம்கொக் ஆகிய அனுபவமுள்ள வீரர்கள் இன்றைய போட்டியில் விளையாடமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## நல்லூரில் நேற்றுக் காலை அரிதான தெய்வீகக் காட்சி

யாழ்ப்பாணம், டிச. 26

நல்லூரில் நேற்று அபூர்வ தெய்வீகக் காட்சி ஒன்றை அடியார்கள் தரிசித்தார்கள். சிவபெருமானும் முருகனும் வீதிவலம் வருகையில் ஒருவரை ஒருவர் சந்தித்த அற்புதமான, அரிதான திருக்காட்சியே அதுவாகும்.

உதயத்தின் சற்றுப் பின்னர் காலைக் கதிரவனின் பொற் கிரணங்கள் மின்னித் துலங்க நல்லூர் சிவன் ஆலயத்தில் இருந்து நடராசப் பெருமான் தேரேறி வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்தார்.

நடராசரின் தேர் கிழக்கு முகம் நோக்கி அசைந்து கொண்டிருந்த வேளை —

நல்லூர் முருகன் வள்ளி தெய்வானை சகிதம் மேற்கு வீதியில் — தெற்கிலிருந்து வடக்கு நோக்கி — திருவுலா வந்தார்.

இந்த அரிதான திருக்காட்சியைக் கண்டு, பக்தர்கள் ஆனந்தம் கொண்டு சிவபெருமானையும் முருகனையும் மாறி மாறி வணங்கி அரோகரா கோஷமிட்டனர்.

சுமார் ஐந்து நிமிட நேரம் அடியார்கள் இந்த அற்புதக் காட்சியை அனுபவிக்க முடிந்தது.

திருவெம்பாவை இறுதி நாளான நேற்று நடராசப் பெருமான் தேரேறி அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

திருவாதிரைத் திருநாளை முன்னிட்டு முருகப்பெருமான் நேற்று திரு உலா வந்தார்.

அப்போதே அடியார்கள் அரிய தெய்வீகக் காட்சியைத் தரிசிக்க முடிந்தது. (அ)

## எம். பிக்களின் கருத்தை சேகரிக்கிறார் ரணில்

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தமது கட்சியின் இளம் எம். பிக்களின் கருத்தைக் கேட்டு வருகிறார்.

இனப்பிரச்சினைத் தீர்வு யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டு உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைத் தேட முடியாது என கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் சுட்டிக் காட்டியதையடுத்தே இக்கருத்துப் பரிமாற்றம் இடம் பெறுவதாகத்தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கனகம்மா ஞானசெல்வம்

(மறுமலர்ச்சிக்கழக மாதர்சங்க உறுப்பினர்)

அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு துயரம் அடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

மத்திய மறுமலர்ச்சிக் கழகம், நல்லூர்.

(44325)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை

தும்பளை பருத்தித்துறையைச் சேர்ந்த அ. மரியாம்பிள்ளை 24-12-96 இல் காலமானார்.

இவர் ஆரோக்கியத்தின் அன்புக் கணவரும், யேசுதாஸ், யோசப் நவரத்தினம் (கொழும்பு), அந்தோனிப்பிள்ளை (முத்து, இத்தாலி), பிலிப் பொஸ்கோ (லண்டன்), ஜெயரத்தினம் (நில அளவைத் திணைக்களம், முத்தையன்கட்டு), பிலோமினா (ஆசிரியை யா/ ஹாட்லிக்கல்லூரி, யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), கிருபைராசா (இத்தாலி), மேரிவிறிசிற்றா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையாரும், கனகமணி, மங்களம், ருக்குமணி, டெய்சி, வசந்தா, ஜீவரட்ணம் (சுவிஸ்), சாந்தினி, பிலிப் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் தேவன், றொபேட், றூபினா, சுனித்தா, நேசன், ரூபன், மனோராஜ், மேர்ஸி, லென்ஸி, குயின்ஸி, அமல்ராஜ், ஹட்சன், அலெக்ஸ் கிருபாலினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (26-12-96) வியாழன் காலை 9.00 மணிக்கு பருத்தித்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி ஜீ. பிலோமினா
(ஆசிரியை)

தும்பளை,
பருத்தித்துறை.

(44322)

### திருமதி மனுவேல்பிள்ளை மரியம்மா இராசமணி

யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மனுவேல்பிள்ளை மரியம்மா இராசமணி நேற்று புதன்கிழமை (25-12-96) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேல்பிள்ளையின் (பொது நூலகம், யாழ். மாநகர சபை) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், இராசநாயகம் மற்றும் அரியநாயகம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற நல்லையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் நல்லுடல் இல. 12/2, சென். ஆன்ஸ் ஒழுங்கை, பாண்டியன்தாழ்விலிருந்து இன்று வியாள் (26-12-96) பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சந்தனமாதா கோயிலில் திருப்பலி ஆராதனையின் பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
இ. சவுந்தரநாயகம்
(மருமகன்)
(யாழ். மாநகர சபை)

12/2, சென். ஆன்ஸ் ஒழுங்கை,
பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்,

(44324)

தனியார் வர்த்தகர்கள் சலுகைக் கட்டணத்தில்

# சின்ன வெங்காயத்தை கொழும்புக்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 26

சின்ன வெங்காயத்தை யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கப்பல் மூலம் 50 வீத கட்டணத்துடன் தனியார் வர்த்தகர்கள் உடனடியாக எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் செய்து வருகிறார்.

ஓரிரு நாள்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் ''மாஹோ'' கப்பல் மூலம் 50 வீத கட்டணத்துடன் சின்ன வெங்காயத்தை தனியார் கொழும்புக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் —

சின்ன வெங்காயத்தைக் கொழும்புக்கு எடுத்துச் செல்ல விரும்பும் தனியார் இன்று முதல் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு — அரச அதிபர் கேட்டுள்ளார்.

தனியார் எடுத்துச் செல்லும் வெங்காயத்தை அவர்களே கொழும்பில் விற்பனை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வெங்காயத்தைப் பழுதடையாமல் கப்பலில் எடுத்துச் செல்ல வசதியாகக் கொழும்பில் இருந்து 5 ஆயிரம் சாக்குகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

காற்று உள்புகக்கூடிய வசதியான இந்தச் சாக்குக்களை விவசாயிகள் செயலகத்தில் பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமய சந்நிதிகளில்

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முழு நாள் நிகழ்வாக திருவாசக முற்றோதல் நடைபெறும். முற்றோதல் காலை 7மணிக்குஆரம்பமாகி மாலை 4 மணி வரை நடைபெறும்.

★ ★ ★

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வெள்ளி தோறும் நடைபெறும் சமய நிகழ்ச்சிகள் தொடரில்—

நாளை மு. ப. 10 மணிக்கு முருக நாம பஜனை இடம்பெறும். சந்நிதி முருகனடியார்கள் இந்தப் பஜனையில் பங்குபற்றுவார்கள்.

★ ★ ★

வரலாற்றுச் சிறப்பு மிக்க இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் தை மாதம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பல புனருத்தாரண வேலைகள் நடைபெற்று மிகப் பெரிய அளவிலான ஓம குண்டம் அமைக்கப்பட்டுள்ளது.

★ ★ ★

கோண்டாவில் குமரகோட்டம் சித்திவைரவ அம்பாள் ஆலயத்தில் நாளை காலை தொடக்கம் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

★ ★ ★

சாவகச்சேரி கத்தோலிக்கப் பங்கு மக்கள் நடத்தும் ஒளிவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய முன்றலில் நடைபெறவுள்ளது. (அ- 117)

## யாழ். வெங்காயம்; கூ.மொ.வி. வாங்கும்

கொழும்பு, டிச. 26

யாழ்ப்பாணத்தில் இருந்து சின்ன வெங்காயத்தைக் கொள்வனவு செய்ய கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

வாழ்க்கைச் செலவு, விலைவாசி ஆகியவற்றைக் குறைப்பது தொடர்பான நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் கொழும்பில் நடந்த சமயமே இந்த இணக்கம் காணப்பட்டது.

வர்த்தக அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட, பிரதி அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே, வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர, யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவன அதிகாரிகள் யாழ்ப்பாணம் சென்று நேரடியாக வெங்காயத்தைப் பார்வையிட்டு கொள்வனவு செய்வதென முடிவு செய்யப்பட்டது.

சின்ன வெங்காயத்தை கிலோ 15 ரூபா வீதம் கொள்வனவு செய்ய வேண்டும் என்று கூட்டத்தில் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்தியாவில் இருந்து 6 ரூபா 65 சதத்துக்கு சின்ன வெங்காயத்தைக் கொள்வனவு செய்ய முடியும் என்று தெரிவித்த கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய அதிகாரிகள், இந்த விலையை ஏற்க மறுத்தனராயினும் தொடர்ந்து நடந்த பேச்சை அடுத்து 15 ரூபா வீதம் கொள்வனவு செய்ய இணக்கம் காணப்பட்டது.

இந்த நிறுவன அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து வெங்காயத்தை நேரடியாகக் கொள்வனவு செய்ய இணக்கம் காணப்பட்டுள்ள போதும், நடைமுறையில் தற்சமயம் விவசாயிகளிடம் கையிருப்பில் உள்ள வெங்காயத்தை அவர்களால் நேரடியாகக் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்காது என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இந்த நிறுவனம் வெங்காயம் அறுவடையானவுடன் அதனைக் கொள்வனவு செய்ய தற்போதைய இணக்கத்தில் வழியேற்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (இ- 3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் கட்ட ஈழப் போர்க்களத்தில் மாறிவரும் யுத்த தந்திரோபாயங்கள்!

## அனுருத்தவின் திட்டமும் பிரபாவின் உத்தியும்

**11 - 12 - 96** அன்று புதன்கிழமை அதிகாலை நேரம். அடை மழை கொட்டிக் கொண்டிருந்தது.

மட்டக்களப்பு—அம்பாறை மாவட்ட எல்லையில் அமைந்திருந்த புளுக்குனாவை விசேடஅதிரடிப்படை முகாம் நோக்கி லொறிகளிலும், ட்ரக்டர்களிலும் புலிகளின் கெரில்லா அணிகள் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தன.

செவ்வாய்க்கிழமையன்று புளுக்குனாவை அதிரடிப் படைமுகாமுக்கு ஒருதொலைபேசிச் செய்தி கிடைத்தது.

**''நாங்கள் தான் புலிகள் பேசுகிறோம். ஆட்டிலறிகளையும், ஆயுதங்களையும் கிளீன் பண்ணி வையுங்கள். எடுத்துச் செல்ல வருகிறோம்'' என்று மறு முனையில் பேசிய குரல் சொன்னது.**

வழக்கமான மிரட்டல் என்று நினைத்தனர் அதிரடிப்படையினர்.

11 - 12 – 96 அன்று அதிகாலை 2 மணியளவில் புலிகளின் கெரில்லாக்களின் முதல் வேட்டுத் தீர்க்கப்பட்ட போது தான் அது மிரட்டல் அல்ல முன்னெச்சரிக்கை என்பது உறுதியாகியது.

### ஒரு மாத காலம் உஷார் நிலை

மாவீரர் தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நாடெங்கும் இராணுவ முகாம்கள் உஷார் நிலையில் இருந்தன.

கிழக்கில் தாக்குதல் நடத்தப்படும் என்பதனை எதிர்பார்த்து அங்குள்ள முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக உஷார் நிலையில் இருக்க வேண்டிய கட்டாயத்தை மாவீரர் தினம் ஏற்படுத்தியிருந்தது.

முகாம்களை நோக்கிப் புலிகள் அணிகள் திரண்டு வருவதற்கு இடமளிக்காமல் புலிகளைத் தேடிச் சென்று தாக்கும் தந்திரோபாய நகர்வுகளையும் படையினர் வடக்கு - கிழக்கில் மேற்கொண்டிருந்தனர்.

புலிகளின் தாக்குதலுக்கு உரிய தினங்களை அறிந்து வைத்து, அத்தகைய நாள்களில் புலிகளைத் தற்காப்பு நிலைக்குத் தள்ளிவிடுவதே படையினரின் புதிய தந்திரோபாயம்.

படையினர் தமது தந்திரோபாயத்தை மாற்றிக் கொண்ட அதே நேரத்தில் புலிகளும் தமது தந்திரோபாயத்தை மாற்றிக் கொண்டனர்.

மாவீரர் தினத் தாக்குதலுக்கு தயாராவது போன்ற ஒரு தோற்றத்தை தமது நடவடிக்கைகள் மூலமாக புலிகள் காண்பித்துக் கொண்டிருந்தனர்.

புலிகள் பெரியளவில் ஒன்று திரண்டு கொண்டிருக்கின்றனர் என்ற தகவல்கள் கிழக்கில் படையினருக்கும் எட்டிக் கொண்டிருந்தன. எட்ட வேண்டும் என்பது தான் புலிகளின் நோக்கம்.

புலிகள் ஒன்று திரள்வதைத் தடுக்க விமானப் படையின் உதவியோடு கிழக்கில் உள்ள காடுகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு திருமலையில் நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலும் தோல்வியில் முடிந்தது. வேறெங்கும் பாரிய தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை.

### ஒருமாத கால நிம்மதி குலைந்தது

புலிகளின் தாக்குதலைத் தடுக்க தாம் மேற்கொண்ட தந்திரோபாயத் தாக்குதல்கள் வெற்றியளித்துவிட்டன என்ற நிம்மதியோடு படையினர் இருந்தனர்.

தொடர்ந்து ஒருமாதகாலமாக விழிப்பாக இருந்தும் எதுவும் நடக்கவில்லை என்பதால் படை முகாம்களில் இருந்தவர்களின் விழிப்பு நிலையில் ஒரு மாதகால களைப்பின் தாக்கமும் ஒரு விதமான அலட்சியம் ஏற்படுவது இயல்புதான்.

'எதிரி விழிப்பாக இருக்கும்போது தாக்காதே' என்பது கெரில்லா யுத்தத்தில் கண்டிப்பான ஒரு விதி.

அந்த விதியோடு மேலும் ஒரு தந்திரத்தையும் சேர்த்துக் கொண்டுள்ளார்கள் புலிகள்.

**கொழும்பிலிருந்து வெளியாகும் 'தினமுரசு' வார இதழில் 'மாறி வரும் தந்திரோபாயங்கள்' என்ற தலைப்பில் 'நாரதர்' எழுதிய கட்டுரை இது.**

எதிரியை களைப்பூட்டுவதற்கு தொடர்ச்சியாக விழிப்பாக இருக்கவைத்து ஏமாற்றுவது என்பது தான் அந்தத் தந்திரம்.

எதிர்பார்த்தது நடக்கவில்லை என்னும் போது களைப்பும் வரும். எதிர்பார்த்து ஏமாந்த படையினர் தமது எதிரிகளின்பலம் தொடர்பாக 'ப்பூ இவ்வளவு தானா' என்று குறைத்து மதிப்பிட்டு விட்டு அலட்சியமாக இருக்கும் நிலையும் ஏற்படும்.

அதனை எதிர்பார்த்துத் தான் புலிகள் தமது தாக்குதலை மிகக் கச்சிதமாக திட்டமிட்டிருந்தனர்.

### உளவு வேலை

புளுக்குனாவை விசேட அதிரடிப்படை முகாம் தொடர்பான உளவறியும் நடவடிக்கைகள் மாவீரர் தினத்துக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. மிக இரகசியமாக உளவு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கில் பொலீஸ் நிலையங்கள், மற்றும் இராணுவ முகாம்கள் மீதுதான் புலிகள் தாக்குதல்களை நடத்தியிருந்தனர். விசேட அதிரடிப் படை முகாம்கள் மீது பாரிய தாக்குதல் நடத்தியதில்லை.

மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு அதிரடிப்படை முகாம் மீதான தாக்குதல் முன்னர் தோல்வியில் முடிந்திருந்தது.

அதனாலும் விசேட அதிரடிப்படையினர் மத்தியில் தமது பலம், எதிரியின் பலம் என்பவற்றை மீறிய கணிப்பு நிலவியிருக்கும் என்று நம்பலாம்.

இவை எல்லாவற்றையும் கணிப்பிட்டு திட்டமிட்டு தயார் நிலையில் இருந்த புலிகள் நல்லதொரு கால நிலையை எதிர்பார்திருந்தனர்.

திங்கள் செவ்வாய்க்கிழமைகளில் மழை பெய்யத் தொடங்கியது. மழைக்குளிர் தூக்கத்துக்கு சுகமானது.

மழைக் காலத்தில் தேடிச் சென்று தாக்குபவர்கள் விழிப்பாகச் செல்லலாம். காத்திருப்பவர்கள் குளிரின் இதம் காரணமாக தூக்கத்தை நாடவே செய்வர்.

காலநிலை வாய்ப்பாக அமைந்தவுடன் தாக்குதலுக்கான நாளாக புதன்கிழமையைத் தெரிவு செய்துவிட்டனர் புலிகள்.

### தலைமை வகித்தவர்

புலிகள் இயக்கத் தளபதிகளில் ஒருவரான ராமின் தலைமையில்தான் தாக்குதல் அணி புறப்பட்டது.

புலிகள் இயக்க அம்பாறை மாவட்டத் தளபதியாக பிரபாகரனால் நியமிக்கப்பட்டவர் ராம். வன்னியில் இருந்து சில மாதங்களுக்கு முன்னர் தான் பயிற்சிபெற்ற புதிய அணிகளோடு ராம் அம்பாறைக்கு திரும்பியிருந்தார்.

1995 இல் திருமலையில் கட்டுமுறிவுக் குளத்தில் இருந்த இராணுவமுகாம் புலிகளால் தாக்கப்பட்டது. அத்தாக்குதலிலும் ராம் பங்கு கொண்டதாகத் தெரிகிறது.

கட்டுமுறிவுக் குள முகாம் தாக்குதலுக்கு ஒத்ததாகவே புளுக்குனாவை முகாம் தாக்குதலும் அமைந்திருக்கிறது.

கட்டுமுறிவுக்குள முகாமிலும் 150 இராணுவத்தினர் இருந்தனர். நாலு மணிநேர மோதலின் பின்னர் முகாம் புலிகளிடம் வீழ்ந்தது.

### 300 புலிகள் பங்குபற்றினர்

கடும்மழை கொட்டிக் கொண்டிருக்க, எங்கும் இருள் சூழ்ந்திருந்த நேரத்தில் இரவு 10.50 மணிக்கு கட்டுமுறிவுக் குளமுகாம் மீது தாக்குதலை ஆரம்பித்தனர் புலிகள்.

அதேபாணியில்தான் இம்முறை புளுக்குனாவை விசேட அதிரடிப்படை முகாம் மீது தாக்குதலை ஆரம்பித்தனர்.

கிட்டத்தட்ட முன்னூறு புலிகள்வரை தாக்குதலில் பங்கெடுத்திருக்கலாம் என்று கணிப்பிடப்படுகிறது.

ஆண்கள் அணிக்கு ஈடாக பெண்கள் அணியினரும் சண்டையில் இறக்கப்பட்டனர்.

ஆர். பி. ஜி. ரொக்கட் லோஞ்சரால் முகாமின் மின்சார ட்ரான்ஸ்போமர் தகர்க்கப்பட்டது. முகாமை இருள் கவ்விக் கொண்டது. அதனைத் தொடர்ந்தே புலிகளின் அணிகள் முகாமை சுற்றிவளைத்து தாக்குதலைத் தொடுத்தன.

எங்கும் இருள். எங்கு புலிகள் நிலையெடுத்திருக்கிறார்கள் என்பதை துல்லியமாக கண்டறிய அதிரடிப்படையினரால் முடியவில்லை.

முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறாவிட்டால் முல்லைத்தீவு முகாமில் ஏற்பட்டது போல பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படும் என்று அதிரடிப்படையினர் நினைத்திருக்கலாம்.

சரமாரியாக சுட்டுக் கொண்டு முகாமின் ஒருபகுதி வழியாக முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளியேறினர்.

இருதரப்பினருக்கும் இடையே கடும்மோதல் ஏற்பட்டது.

முகாமில் பலியானவர்கள் தவிர ஏனையோர் முற்றுகையில் இருந்து தப்பிச் சென்றனர். முகாம் புலிகளின் கையில் வீழ்ந்தது.

### ஆட்லறிகளும் புலிகள் வசம்

85 மில்லி மீட்டர் ஆட்லறிகளும் முகாமில் இருந்தன. தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் அந்த ஆட்லறிகள் வைக்கப்பட்டிருந்த பகுதியை நோக்கி புலிகளின் அணியொன்று விரைந்து கைப்பற்றியது. [illegible] அதனால் அந்த ஆட்லறிகளைப் பயன்படுத்தி அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்தவும் முடியாமல் போனது.

முகாம் உள் நிலவரங்கள் மிகத்துல்லியமாக புலிகளால் அறியப்பட்டுள்ளன என்பது தான் மற்றொரு ஆச்சரியம்.

ஒரு கெரில்லாத் தாக்குதலின் வெற்றிக்கு மூன்று காரணங்கள் மிகப் பிரதானமானவை.

1. தாக்குதல் அணிகளின் வேகம். 2. காலநிலை 3. துல்லியமான தகவல்கள். புளுக்குனாவை முகாம் தாக்குதலில் மேற்கண்ட மூன்று காரணங்களும் புலிகளால் நுட்பமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முகாம் பகுதி தமது கட்டுப்பாட்டில் வந்ததும் தமது வாகனங்களில் அங்கிருந்த ஆயுதங்களை புலிகள் ஏற்றி முடித்தனர். இராணுவக் கவச வாகனங்கள் கைப்பற்றப் பட்டதாக செய்திகள் முன்னர் வெளியாகி இருந்தன. எனினும் கவச வாகனங்கள் எதுவும் புலிகளால் எடுத்துச் செல்லப்படவில்லை. இராணுவத்தினரின் வாகனங்களான ட்ரக்டர் ஒன்றும், டிரக் ஒன்றும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டது.

முகாமில் இருந்த பாரிய ஜெனரேட்டரையும் கொண்டு செல்ல புலிகள் முற்பட்டனர். ஜெனரேட்டர் வைக்கப்பட்டிருந்த வண்டியின் சக்கரங்களில் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் சூடுபட்டு காற்றுப் போயிருந்தது. அதனால் அதனைக் கட்டி இழுத்துச் செல்ல முடியாமல் கைவிட்டுச் சென்றுவிட்டனர்.

### ஆள்பல இழப்பு

சண்டையொன்று தொடர்பாக ஆராயும் போது இருதரப்பின் செயற்பாடுகளையும் நோக்க வேண்டும்.

புளுக்குனாவை முகாம் தாக்குதல் முற்று முழுதான ஒரு கெரிலாத் தாக்குதலாகும். முகாமில் இருந்த படையினரைவிட புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

அவ்வாறு இருந்தும் முகாமில் இருந்த அதிரடிப்படையினரில் நூறு பேர் வரை முற்றுகையில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். அதில் 45 பேர்வரை காயமடைந்தனர்.

தாக்குதல் ஆரம்பித்ததும் அதிரடிப் படையினர் உடனடியாக பின்வாங்கிவிடவில்லை. கடும் எதிர்ப்பொன்றை காட்டியிருக்கிறார்கள்.

புலிகளின் தரப்பில் 26 பேர் பலியாகி இருப்பதும், மோதல் இரண்டு மணிநேரம் நடைபெற்றதும் சண்டையின் தீவிரத்தை உணர்த்துகின்றன.

புலிகளின் அணிகளின் பலமும், வேகமும், துல்லியமான தகவல்களும் புலிகளின் வெற்றிக்கு சாதகமாக அமைந்துள்ளன. இதில் ஒன்று பிசகி இருந்தால் புலிகளின் தரப்பு இழப்புக்கள் அதிகமாக இருந்திருக்கலாம்

அதிரடிப் படையினர் தரப்பில் 50 பேர் வரை பலியாகி இருக்கின்றனர். புலிகளின் தரப்பில் 26 பேர் பலியாகி உள்ளனர். புலிகளின் இழப்பு ஒப்பீட்டளவில் குறைவாகத் தெரிந்தாலும் குறிப்பிட்ட சண்டையின் இருதரப்பு ஆள்பல எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது சற்று அதிகமான இழப்பாகவே இருக்கிறது.

### ரத்வத்தையின் திட்டமும் பிரபாவின் தந்திரமும்

மரபுப் போரில் தமது ஆள்பலத்தால் படையினர் வெற்றி பெறுகின்றனர். புலிகளின் அணிகளைவிட பல மடங்கு அதிகமான ஆள்பல படைக்கலப் பலத்தோடு படையினர் தமது பலத்தை நிலை நிறுத்தி வருகின்றனர்.

கெரில்லாப் போரில் புலிகள் தமது ஆள்பலத்தை ஒன்றுதிரட்டி தாக்கி வெற்றி பெறுகின்றனர்.

மரபுப் போரில் படையினர் வியூகம் வகுக்கும்போது அதில் சிக்காமல் தவிர்த்துக் கொள்வதன் மூலம் புலிகள் தமது ஆள்பலத்தைத் தக்க வைத்துக்கொள்கின்றனர்.

மரபுரீதியான படை நகர்வுகளில் இருந்து கெரில்லா அணிகள் தப்பிக்கொள்ள முடியும்.

ஆனால் கெரில்லாக்களின் திடீர்த் தாக்குதல் எப்போது. எங்கே நடக்கும் என்பது தெரியாமையால் மரபுப் படையணிகள் கெரில்லாத் தாக்குதல்களில் சிக்கிக் கொள்வது தவிர்க்க முடியாமல் இருக்கும்.

மரபுப் போர் முறையில் புலிகளுக்குள்ள பலவீனங்களைப்பயன்படுத்தி வடபகுதியில் இராணுவ பலத்தை மேலோங்கச் செய்வது என்பதுதான் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் தந்திரம்.

புலிகளது அணிகளை சண்டைக்கு இழுத்து வியூகத்திற்குள் சிக்கவைப்பதுதான் நோக்கம். ஆனால் புலிகளோ அந்தச் சண்டைகளைத் தவிர்த்துவிட்டு தமது அணிகளை பாதுகாத்துக்கொள்கின்றனர்.

'எதிரிக்கு சாதகமற்ற சண்டைமுனைகளை திறப்பது' என்பது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் திட்டம்.

''எதிரிக்குச் சாதகமான முனைகளில் இருந்து பின்வாங்கு'' என்பது பிரபாகரனின் தந்திரம்.

வடக்கில்தான் புலிகளின் முதுகெலும்பு இருக்கிறது. அதனால் கிழக்கை இழந்தாலும் வடக்கை கட்டுப்பாட்டில் கொண்டு வருவதுதான் முதல் வேலைஎன்பது அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் கணக்கு.

வடக்கை முழுதாக கைப்பற்றி விட்டால் கிழக்கை அதன் பின்னர் சுலபமாக கட்டுப்படுத்தலாம் என்று அவர் நினைக்கிறார்.

வடபகுதியில் தான் புலிகளின் பிரதான பலம் இருப்பதாகக் கருதப்படுவதால், அங்கு பெறும் வெற்றிகள் தெற்கில் பிரமாதமாகக் கருதப்படும். வெளியுலகிலும் வியந்து நோக்கப்படும் என்று அரசாங்கம் நினைக்கிறது.

ஆனால் கிழக்கிலும் தமது பிரதான பலம் இருக்கிறது என்பதை சாண்பிக்கும் பாரிய தாக்குதல்களுக்கு ஏற்ப அங்குள்ள அணிகளை ஒழுங்குபடுத்தியிருக்கிறார் பிரபாகரன்.

புளுக்குனாவை முகாம் தாக்குதல் போன்ற பாரிய தாக்குதல்கள் கிழக்கில் இடம் பெறும்போது வடக்கில் பெறும் வெற்றிகள் மட்டுமே புலிகளின் மீதான வெற்றிகளாகக் கருதப்பட முடியாது என்ற அபிப்பிராயமும் ஏற்படத் தொடங்கியுள்ளது.

அது தவிர கிழக்கில் இருந்து படையினரை வடபகுதித் தாக்குதலுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை ஒருவரையறைக்கு மேல் செய்ய முடியாது.

கிழக்கில் உள்ள முகாம்களை பாதுகாக்க வேண்டுமானால் ஒவ்வொரு முகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு மாதம் என உறுதியளிக்கப்பட்ட போதும்

# மூன்று மாத ஆபத்து அலவன்ஸே வடக்கு- கிழக்கு ஆசிரியர்களுக்கு!

வடக்கு-கிழக்கு ஆசிரியர்களுக்கு நான்கு மாத காலத்துக்குரிய ஆபத்துப்படி (அலவன்ஸ்) வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட போதும் —

தற்போது மூன்று மாதங்களுக்குரிய அலவன்ஸை வழங்கவே மாகாணக் கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது.

ஆபத்துக்கால அலவன்ஸ் வழங்கப்படாமையை கண்டித்து கிழக்கில் உள்ள தமிழ், முஸ்லிம், சிங்கள ஆசிரியர்கள் மாகாண கல்வியமைச்சு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ததும் —

அண்மையில் நடந்த ஜி. சீ. ஈ. (சாதாரண) தரப் பரீட்சையை இதற்காகபகிஸ்கரிக்க அவர்கள் முடிவு செய்ததும்—

பின்னர் 4 மாத அலவன்ஸ் வழங்கப்படும் என்ற உறுதிமொழியை அடுத்து அந்த பகிஸ்கரிப்பை அவர்கள் கைவிட்டதும் —தெரிந்தவையே.

நான்கு மாதத்துக்குரிய ஆபத்து அலவன்ஸ் வழங்க மத்திய கல்வியமைச்சில் இருந்து போதிய நிதி கிடைக்காததால் 3 மாதக் கொடுப்பனவே தற்போது வழங்கவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாகாண கல்வியமைச்சு தெரிவித்தது.

இதேவேளை— யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு மூன்று மாத ஆபத்து அலவன்ஸ் வழங்கத் தேவையான நிதி கடந்த திங்கட்கிழமை யாழ். கல்வி அலுவலகத்துக்கு எடுத்து வரப்பட்டிருந்தது.

இம் மாதத்துக்கான சம்பளக் கட்டுநிதி கைக்கு வந்து சேராத காரணத்தால், ஆபத்து அலவன்ஸ் கொடுப்பனவுக்கான நிதியில் இருந்து ஆசிரியர்களுக்கான சம்பளம் உடன் வழங்கப்பட்டதாக அறிய வந்தது.

ஆபத்து அலவன்ஸ் கொடுப்பனவு, சம்பளத்துக்கான கட்டுநிதி வந்து சேர்ந்ததும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-150-3)

## இடைக்கால நிர்வாகம் பற்றிய உத்தேச ஒழுங்கு விதிகள் தயார்!

### டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்

உத்தேச வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத்தின் அதிகாரங்கள் செயற்பாடுகள் சம்பந்தமான ஒழுங்கு விதிக் கோவை ஒன்றை ஏனைய கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தாம் தயாரித்துள்ளதாக ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா 'த ஐலண்ட்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

''அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்தபோது, இடைக்கால நிர்வாக சபையின் தேவை குறித்து விளக்கிக் கூறினேன்.

''வடக்கு - கிழக்குக்குப் பொறுப்பான அமைச்சு ஒன்றை உருவாக்கி தந்தால் அந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராகப் பதவியேற்க முடியும் என்றும் அவரிடம் கூறினேன்.''— இப்படி அவர் 'த ஐலண்ட்' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். (உ-150-3)

## அகதி அந்தஸ்து வழங்குமாறு வடக்கு முஸ்லிம்கள் கோரிக்கை

'எமது தாயக மண்ணாகிய வடக்குக்குச் செல்லும் வரை எமக்கு அகதி அந்தஸ்து தரப்பட வேண்டும்.'

இப்படிக் கோரியுள்ளார் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் உப தலைவர் பி. ஏ. எஸ். கப்யான்.

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் கடந்த 6 வருடங்களாக எதிர்நோக்கி நிற்கும் பிரச்சினைகளை விளக்கி அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

தாயக மண்ணாகிய வடக்குக்குத் திரும்பிச் செல்லும் வரையில் எமக்கு அகதி அந்தஸ்து தரப்பட்டு, அது தேசிய, சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

தாயக மண்ணுக்கு மீளச் சென்று, ஸ்திரமான வாழ்க்கைக் கட்டமைப்பை அடையும் வரையில், தற்பொழுது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் உணவு நிவாரணங்கள் எந்தக்காரணம் கொண்டும் நிறுத்தப்படக் கூடாது.

தற்காலிக வாழ்விடங்கள், பாடசாலைகள், நீர், மலசலகூட மற்றும் பொதுவசதிகள் மேலும் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

இப்படி அவரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## மீண்டும் ஆரம்பம்

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல மாவட்டங்களிலும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களை மீளவும் இயங்கவைக்க உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

## மூன்றாம்கட்ட ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிலும் கணிசமான அளவு படையினர் இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**யுத்தத்தின் அச்சாணிகள்**

புலிகளின் 'மூன்றாம் கட்ட ஈழப்போரில்' கிழக்கு மாகாண அணிகள் யுத்தத்தின் அச்சாணிகளாக மாறியுள்ளன. வடக்கில் முழுப் பலத்தையும் ஒன்று குவித்து புலிகளின் தலைமைப் பீடத்தை கிடுக்கிப்பிடிக்குள் தள்ளிவிடும் தந்திரத்துக்கு போதுமான படை பலம் தேவை. அதனைத் தடுக்கும் பொறுப்பை கிழக்கில் உள்ள அணிகளிடம் விட்டிருக்கிறார் பிரபாகரன்.

சாதகமற்ற சண்டைமுனைகளில் இருந்து புலிகள் பின்வாங்கிச் செல்வதால், அவர்களைத் துரத்திச் சென்று பின்வாங்க இடமில்லாமல் தொடர்ந்து தாக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் மரபுப் போர் பலத்தால் புலிகளை வடக்கில் பின்நோக்கித் தள்ளும் தந்திரம் முழுவெற்றியடையும்.

ஆனால் அவ்வாறு செய்வதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் கிழக்கில் தனது அணிகளை நகர்த்தியிருக்கிறார் பிரபாகரன்.

ஒரு கெரில்லா யுத்தத்தில் தொடர்ந்து தாக்குபிடிக்கத் தக்க போதிய படைக்கல, ஆள்பல நிலை புலிகளிடம் இருக்கிறது.

அதனால் அரசாங்கம் நினைக்கும் விதமாக மட்டும் யுத்தத்தை நடத்திச் செல்ல முடியாது. இரு தரப்பின் இழுப்புக்கு ஏற்ப யுத்தம் வளைந்தும், நெளிந்தும் சென்று கொண்டிருக்கிறது. ★

## விளையாட்டுத்துறை அதிகாரியின் முறைகேடுகள் பற்றி முறைப்பாடு

### குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பு

இலங்கையின் மூத்த விளையாட்டுத்துறை அதிகாரியும் லட்சாதிபதியுமான ஒருவர் பல தமிழர்களைசட்டவிரோதமானமுறையில் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி, பல 'மில்லியன்' ரூபாக்களைக் குறுக்கு வழியில் சம்பாதித்திருப்பது குறித்து தேசிய புலனாய்வுப் பணியகத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா பிலியட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் சங்கத்தலைவரும் பொலீஸ் அத்தியட்சகருமான ரி. எச். ஜயா இது குறித்து முறைப்பாடு செய்திருக்கின்றார்.

விளையாட்டுத்துறை தொடர்பான இலங்கையின் தேசிய சம்மேளனம் ஒன்றுக்கு தலைமை வகித்த மேற்படி லட்சாதிபதி, சர்வதேச பிலியட்ஸ் மற்றும் ஸ்னூக்கர் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றச் செல்கின்றவர்கள் என்று குறிப்பிட்டு பல தமிழர்களை, சிங்களவர்களின் பெயர்களிலும் அவர்களின் பாஸ்போர்ட்டுகளிலும் சுவிஸ், மோல்டா, பின்லாந்து போன்ற நாடுகளுக்கு அனுப்பி வைத்திருப்பதாக ரி. எச். ஜயா தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக பல முக்கிய ஆவணங்களையும் அவர் தேசிய புலனாய்வுப் பணியகத்திடம் ஒப்படைத்திருக்கின்றார். (உ)

வட பகுதிக்கான

## புனர்வாழ்வு, நிவாரணப் பணி அமைச்சிடம் இருந்து சபைக்கு!

வடக்கு மாகாணத்துக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு, உணவு நிவாரணப் பணிகள் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபைக்கு கைமாற உள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 90 ஆம் ஆண்டுக்குப் பின் யுத்தம் உச்ச கட்டத்தை அடைந்த பின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு உணவு அனுப்புதல் முதல் கொண்டு பல்வேறு புனரமைப்புப் பணிகளை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சே மேற்கொண்டு வந்தது.

ஆனால் இந்த அமைச்சின் வடபகுதிக்கான பணிகள் ஜனாதிபதியின் நேரடி மேற்பார்வையில் செயற்படும் வடக்கு - புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையிடம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் கையளிக்கப்படவிருக்கின்றன.

கிழக்குக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தொடர்ந்தும் அந்த அமைச்சின் வசமே இருக்கும்.

புதிய ஏற்பாட்டின் படி வடக்கு மக்களுக்கு உலர் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை கப்பல் மற்றும் வாகன அணி மூலம் அனுப்பும் பணிகளும், புனரமைப்புப் பணிகளும் அதிகர்ரசபையினால் மேற்கொள்ளப்படும்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பணிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடம் இருந்து ஏற்கனவே அதிகார சபைக்கு மாற்றப் பட்டு விட்டமை குறிப்பிடத்தக்கது. (உ- 3)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

இறைபதம் அடைந்த

### திருமதி இராசையா தங்கம்மா

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 — 4 — 1920 | 26 — 11 — 1996 |

திருகோணமலையில் 26 - 11 - 96 இல் இறைபதம் அடைந்த எனது தாயாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், கடிதமூலமும் வந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இ. சர்வேஸ்வரன்
(மகன்),
குடும்பத்தினர்

தாளையம்பதி வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(சி/ 3776)

யா| மாதகல்

நுணசை வித்தியாலய அன்னையின்

## 31 ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்

எமது வித்தியாலயத்தின் சிறந்த மாணவனும், சாரணனும், நடிகனுமாகிய

### செல்வன் நவரத்தினம் கங்கைதாசன்

அவர்களின் மறைவையொட்டி அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிப்பதோடு அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நுணசை முருகனை வேண்டிநிற்கும்:

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பா. அ. சபையினர், ப. மா. சங்கத்தினர்.

(44313)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் செ. கணபதிப்பிள்ளை

(பிரபல வர்த்தகர்)

எமது அன்புத் தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியை நாளை (27-12-96) வெள்ளிக்கிழமை நடைபெறும். சமயக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
தருமலிங்கம் [ஆசிரியர்],
இந்திராணி, தவமணி.
(பிள்ளைகள்)

தாமோதர வித்தியாசாலையடி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

[44323]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# பர்மாவில் எதிர்க்கட்சி உறுப்பினர் அறுபது பேர் தடுப்புக் காவலில்!

## அமெரிக்க அரசு கண்டனம்

ரங்கூன், டிச. 26

இம்மாதம் பர்மாவில் இடம்பெற்ற மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவியான ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சியைச் சேர்ந்த 60 உறுப்பினர்களை பர்மிய இராணுவ ஆட்சியாளர்கள் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

வீதித்தடைகள் போடப்பட்டுள்ளதாலும் நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாலும் எதிர்க்கட்சித் தலைவி வீட்டுக்காவலிலேயே வைக்கப்பட்டுள்ளது போன்ற நிலையில் இருக்கிறார் என தேசிய ஜனநாயக லீக்கின் உபதலைவர் ரின் ஓ தெரிவித்தார்.

நோபல் பரிசு பெற்றவரான ஆங் சான் சூசூ கடந்த இரண்டுவாரங்களாக வீட்டைவிட்டு வெளியே செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆர்பாட்டக்காரர்களுக்கும் தனக்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை எனவும் ஆனால் மாணவர்கள் மீது அனுதாபம் கொண்டுள்ளதாகவும் ஆங் சான் சூகி தெரிவித்துள்ளார். சமீபகாலமாக பர்மாவில் ஜனநாயகக்கிளர்ச்சிகள் அதிகரித்து வருகின்றன. கிளர்ச்சிகளை அடக்கும் நோக்கில் பர்மா இராணுவ அதிகாரிகள் எதிர்கட்சித் தலைவியையும் அவரது கட்சி உறுப்பினர்களையும் அடிக்கடி கைது செய்வது, காவலில் வைப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பர்மாவில் இடம்பெறும் ஜனநாய விரோதச் சம்பவங்கள் குறித்தும் பர்மிய இராணுவ ஆட்சியாளர்களின் அடக்கு முறைகள் குறித்தும் கிளின்ரன் அரசு தனது கண்டனத்தை தெரிவித்துள்ளதுடன் பர்மியர்கள் அமெரிக்காவுக்கு வருவது தொடர்பான குடிவரவுச் சட்டங்களையும் கடுமையாக்கியுள்ளது. (அ-10)

## ரஷ்ய விஞ்ஞானி உண்ணாவிரதம்

மொஸ்கோ, டிச. 26

ரஷ்ய தேசிய விஞ்ஞானக் கழகத்தின் தலைவர் விளாடினஸ் ஸ்ரொக்கோ, அரசாங்கம் விஞ்ஞானிகளுக்கு சம்பளம் வழங்காத பொறுப்பற்ற செயலைக்கண்டித்து காலவரையற்ற உண்ணா விரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்.

ஒருகாலத்தில் உலகில் முதல் நிலை மரியாதைக்கு உரியவர்களாயிருந்த ரஷ்ய விஞ்ஞானிகளுக்கு இன்றைய ரஷ்யாவில் எவ்வித மரியாதையுமில்லை. விஞ்ஞானிகளுக்குச் சம்பளம் வழங்காத ஓர் அரசால் என்ன நிர்வாகம் நடத்த முடியும் என விளாடினஸ் ஸ்ரொக்கோ ஆதங்கம் தெரிவித்துள்ளார். (அ-10)

# கப்பல் தலைவனைக் கொன்ற மீனவருக்கு மரண தண்டனை

## தென் கொரிய நீதிமன்றம் தீர்ப்பு

சோல், டிச. 26

மீன்பிடிக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட கலகத்தில் அக்கப்பல் தலைவனையும் 12 சக மீனவர்களையும் கொன்று கடலில் வீசிய குற்றத்திற்காக, அக்கப்பலில் பணியாற்றிய 6 மீனவர்களுக்கு தென் கொரிய நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் தென் பசுபிக் சமுத்திரத்தில் சென்று கொண்டிருந்த போது அந்தக் கப்பலில் கலவரம் ஏற்பட்டது.

கப்பல் தலைவன் தங்களை மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்ததாகவும் தங்கள் மீது அனுதாபம் காட்டுமாறும் அந்த மீனவர்கள் நீதிமன்றத்திடம் கோரினர்.

கப்பலில் குழப்பம் விளைவித்த காரணத்திற்காக அந்த மீனவர்களை வேலையிலிருந்து நீக்குவது என கப்பல் தலைவன் தெரிவித்ததைத் தொடர்ந்தே, அம்மீனவர்கள் வன்முறையில் இறங்கி குறிப்பிட்ட தலைவனையும் சக மீனவர்கள் 12 பேரையும் கொன்றதாக நீதி மன்றில் தெரிவிக்கப்பட்டது, (அ-10)

## உலக அரங்கில்

# நத்தார் ஆராதனையின் போது தேவாலயத்தில் குண்டு வெடிப்பு!

## மூன்று பெண்கள் உடல் சிதறிப் பலி

பிராங்பேர்ட், டிச. 26

நாத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது ஜேர்மனியிலுள்ள பிராங்பேர்ட் நகரத்தில் அமைந்துள்ள புரட்டஸ்தாந்து தேவாலயம் ஒன்றில் குண்டு வெடித்தது. இச் சம்பவத்தில் ஆராதனைக்கு வந்திருந்த மூன்று பெண்கள் உடல் சிதறிப் பலியானார்கள்.

பிரார்த்தனைக்குச் சென்ற பெண் தனது உடலில் அல்லது கைப்பைக்குள் குண்டை எடுத்துச் சென்றிருக்கலாம் என நம்பப்படுகிறது. குண்டுதாரியும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

அந்தப் பெண் பற்றிய விவரங்கள் மற்றும் என்ன காரணத்திற்காக குண்டை வெடிக்கவைத்தார் என்பன பற்றி உடனடியாக அறிய முடிய வில்லை என்று ஜேர்மன் பொலீசார் தெரிவித்தனர். (அ-10)

## பேச்சுக்கள் இழுபறி நிலையில்

ஜெரூசலம், டிச. 26

பலஸ்தீனத் தலைவர் அரபாத்தும் இஸ்ரேலியப் பிரதமர் நத்தனியாகுவும் ஹப்போனில் இருந்து இஸ்ரேலியப் படையினரை விலக்குவது தொடர்பாக மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு காணத் தவறிவிட்டனர்.

ஆயினும் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுவது என இரு தலைவர்களும் உடன்பட்டுள்ளதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர். (அ 10)

# ரஷ்யச் செய்மதியில் இரண்டு குரங்குகள்!

மொஸ்கோ, டிச. 26

ரஷ்ய விண்வெளி ஆய்வு நிறுவனம் செய்மதி ஒன்றில் இரண்டு குரங்குகளை விண்வெளிக்கு அனுப்பியுள்ளது. 1992 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பாலூட்டும் விலங்கினம் விண்வெளிக்கு அனுப்பப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

இந்தத் திட்டத்திற்கான கூடுதலான பண உதவியை பிரான்சும் அமெரிக்காவும் வழங்கியுள்ளன. ஆனால் விலங்கினக் காப்பு ஆய்வாளர்கள் இத் திட்டத்தைக் கண்டித்துள்ளனர்.

குரங்குகளுடன் நத்தை, பல்லி, ஈ, மற்றும் நுண் உயிர்கள் என்று பல்வகை உயிரினங்களும் இச் செய்மதியில் அனுப்பப்பட்டுள்ளன.

இந்தச் செய்மதி இரண்டு வாரங்கள் பூமியைச் சுற்றிவரும். இவ்வாறு சுற்றிவரும் போது எடையற்ற நிலை, உடல் இயங்க ஒழுங்கு, நோய் எதிர்ப்பு ஆற்றல் ஆகியன எவ்வாறு உள்ளன என்பதை அறிவியலாளர்கள் கண்காணிக்கவுள்ளனர்.

இச் செய்மதியில் உள்ள குரங்குகள் நல்ல முறையில் இருப்பதாகவும் அவைகள் பொழுதுபோக்க கணிப் பொறி விளையாட்டுக்கள் விளையாடுவதற்குக் கூட வசதிகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-10)

# கப்பலில் வடக்கே அனுப்பப்பட்ட பொருள்கள் குறித்து விசாரணை!

கொழும்பு, டிச.26

யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் கள்ள வழியாக வேறு எங்காவது சென்றடைந்தனவா? அவ்வாறு இல்லை எனில் அனுப்பப்படாத பொருள்களின் பெறுமதிக்கு உரிய பணம் அறவிடப்பட்டதா? இவை தொடர்பாக அறிவதற்கு உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என ''லக்பிம'' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது.

இந்த விசாரணைகளின் ஓர் அங்கமாகவே யாழ்ப்பாணத்திற்கு கப்பல்களில் பொருள்களை அனுப்பும் பணிக்குப் பொறுப்பாக இருந்த பிரதி ஆணையாளர் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கு அனைத்துப் பொருள்களும் கப்பல் மூலமே அனுப்பப்படுகின்றன. ஆனால் கப்பலில் பொருள்கள் கையளிக்கப்பட்டது தொடர்பாகவோ அல்லது யாழ்ப்பாணத்தில் அப்பொருள்களைப் பெற்றுக் கொண்டது தொடர்பாகவோ எதுவிதக் குறிப்புக்களும் இல்லை.

கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட அத்தியாவசியப் பொருள்கள் இடை வழியில் காணாமல் போயுள்ள சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே இரகசியப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் — இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

## புத்தகங்கள் கொள்வனவு

தென்மராட்சி, டிச. 26

சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் பொது நூல் நிலையங்களுக்கு வழங்கவென தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் ஓர் இலட்சத்து இரண்டாயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலக உள்ளூராட்சிப் பிரிவினர் தெரிவித்தனர். (இ-117)

## யாழ்ப்பாணத்தில்

# ஜேர்மன் தொழில்நுட்ப கூட்டுத்தாபனக் கிளை

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ். மாவட்டத்தில் ஜேர்மன் அரசு மேற்கொள்ளவிருக்கும் புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்பார்வை செய்ய ஜி. ரி. இஸட் என்ற ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனம் தனது கிளை அலுவலகம் ஒன்றை இங்கு ஆரம்பிக்கவிருக்கின்றது.

இவ்வாரம் யாழ்ப்பாணம் வரும் இந்த அமைப்பின் பிரதிநிதிகள் இந்த அலுவலகத்தை ஆரம்பிப்பர்.

யாழ். மாநகரசபைப் பகுதியில் குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அளித்தல், பாடசாலைகளைப் புனரமைத்தல்,சேதமடைந்த வீடுகளைப் புனரமைத்தல் போன்ற திட்டங்களை இந்த அமைப்பு மேற்கொள்ளவுள்ளது.

இந்த அமைப்பு பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தது.

இத்திட்டங்கள் அடுத்த மாதம் முதல் செயற்படுத்தப்படவிருக்கின்றன. (உ-3)

## முத்திரைகளுக்கு தட்டுப்பாடு

உரும்பிராய், டிச. 26

முத்திரைகளுக்கு தற்போது தட்டுப்பாடு நிலவுகிறது.

சாதாரண தபாலுக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு ரூபா பெறுமதியான முத்திரைகள் உட்பட சகல வகையான முத்திரைகளுக்கும் தபாலகங்களில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-154)

# விண்ணப்பித்த பாடம் ஒன்று; பரீட்சை எழுதிய பாடம் வேறு!

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆண்டு 9 மாணவர்களுக்கான தொழில் முன்னிலைப் பாடப் பரீட்சையில் வர்த்தக பாட பரீட்சையில் தோற்றச் சென்ற மூன்று மாணவர்கள் விவசாய பாட பரீட்சை எழுதிய சம்பவம் கைதடிப் பகுதியில் இடம்பெற்றதாக தெரிய வருகிறது.

பரீட்சை மண்டபத்திற்கு வர்த்தக பாடத்திற்கான வினாத்தாள்கள் வராததால் இம் மாணவர்கள் விவசாய பாடத்தில் தோற்றுமாறு மண்டப மேற்பார்வையாளர்களால் கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் —

வேறு வழியின்றி விவசாய பாட பரீட்சைக்கு தாம் தோற்றியதாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

விண்ணப்பித்த பாடத்திற்கான வினாத்தாள்கள் பரீட்சை மண்டபத்திற்கு அனுப்பப்படாதது குறித்து பெற்றோர்கள் அதிருப்தி தெரிவித்தனர். (உ-117)

# வடக்கே வருவதற்கு தயாராகிறது புளொட்!

வடக்கில் விரைவில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களுக்கு முகம்கொடுக்கும் நோக்கில் புளொட் அமைப்பின் பிரதிநிதிகள் விரைவில் வடபகுதி செல்லத் தயாராகி வருவதாக 'லக்பிம' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

தேர்தலை நடத்தக் கூடிய சூழ்நிலை தற்போதுவடக்கு-கிழக்கில் இல்லை என்பதால் தேர்தலை நடத்தும் அரசின் முடிவு குறித்துதமிழ்க் கட்சிகள் எதிர்ப்பைத் தெரிவித்தன.

வடக்கு- கிழக்குப் பிரதேசங்களுக்குச் சென்று தேர்தலை நடத்துவதற்குரிய பொருத்தமான சூழ்நிலை அங்கு இருக்கிறதா? இல்லையா? என்பதை அறிந்து வருமாறு அரசு தமிழ்க்கட்சிகளிடம் தெரிவித்திருந்தது. அரசின் இந்த வேண்டுகோளை ஏற்றே புளொட் அமைப்புப் பிரதிநிதிகள் வடபகுதி செல்லவுள்ளதாக 'லக்பிம' பத்திரிகை மேலும் தெரித்தது.

## விலைஉயர்வு

யாழ். நகரில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் இறைச்சியின் விலை திடீரென அதிகரித்துள்ளது.

ஒரு கிலோ தனி இறைச்சி 120 ரூபாவாகவும் முள்ளுடன் 100 ரூபாகவும் விற்கப்படுகிறது.

போதியளவு மாடுகள் இறைச்சிக்காக கிடைப்பதில்லை எனவும் —

தூர இடங்களிலிருந்து மாடுகளைக் கொண்டுவருவதில் பல பிரச்சினைகள் இருப்பதாகவும் —

விலை உயர்வுக்குக் காரணம் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### படிவங்கள்

பிரதேச சபைகளுக்குரிய படிவங்கள், இடாப்புக்கள்- வீதவரி, உரிமக்கட்டணம், இதர வருமானம், குத்தகை ஒப்பந்தம், சம்பளப்பட்டியல் மற்றும் தேவையான படிவங்களுக்கு - ஆனந்தா புத்தகசாலை, காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம். [44319]

## அகதிகள் தூதரக அதிகாரி வருகை

யாழ்ப்பாணம், டிச. 26

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி பீற்றர் மேயர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்.

குடாநாட்டில் சில தினங்கள் தங்கும் அவர் ஊர்காவற்றுறை, நெடுந்தீவுப் பகுதிகள் உட்பட பல பகுதிகளுக்கும் சென்று தமது அமைப்பின் செயற்பாடுகள் குறித்து ஆராய்வார். (உ-3)

## உரம் விலை அதிகரிப்பு

வலி.தென்மேற்கு, டிச.26

வலிகாமம் தெற்கு- மேற்கு கமநலசேவை நிலையங்களில் வீ. 1 அடி உரம் 50 ரூபா அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது.

கடந்த காலங்களில் ஒரு அந்தர் 850 ரூபாவாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட இந்த உரம் தற்பொழுது 900 ரூபாவாக விநியோகம் செய்யப்படுகின்றது. (இ-145)

## புத்தகங்களை மீள ஒப்படைக்க கோரிக்கை

தென்மராட்சி, டிச. 26

பளைப் பிரதேச சபை பொது நூல் நிலையத்தில் புத்தகங்களை இரவல் பெற்ற யாழ். மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து பளைப் பகுதியில் தங்கியிருந்த மக்கள், இரவல் பெற்ற புத்தகங்களை மீள ஒப்படைக்குமாறு பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் கோரி உள்ளார்.

(இ-117)

## உபகரணங்கள் பழுது

யாழ்ப்பாணம், டிச. 26

யாழ்ப்பாண விவசாயத் திணைக்களத்தில் மழைவீழ்ச்சியின் அளவைக் கணிப்பதற்கான உபகரணங்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அண்மையில் பெய்த மழைவீழ்ச்சியின் அளவைக் கணிக்க முடியாமல் போனதாக விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (உ-5)

## திருத்த வேலை

வடமராட்சி, டிச. 26

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் திருத்த வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

முதற் கட்டமாக கோயிலின் பிரதான மணிக்கூட்டுக்கோபுரம் திருத்தப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஷெல் தாக்குதல்களினால் மணிக்கூட்டுக் கோபுரம், வசந்த (முன்) மண்டபம் என்பன இடிந்து விழுந்தன. கோயிலில் ஏனைய கட்டடங்களும் சேதமடைந்திருந்தன. (உ-173)

---

அனைவருக்கும் எமது நத்தார்-புதுவருட நல்வாழ்த்துக்கள்

## திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

## கிறிஸ்மஸ் விழா

காலம்: 28 சனி, 29 ஞாயிறு இரண்டு நாள்கள்
நேரம்: தினமும் மாலை 4 மணி
இடம்: மன்ற அரங்கு

பாட்டு, நடனம், நாடகம், நாட்டுக்கூத்து
கிறிஸ்மஸ் கானங்கள் (இசை நிகழ்ச்சி)
இவற்றுடன்
ஞாயிறு சிறப்பு நிகழ்ச்சி

### கவிஞர் வாகரை வாணனின் 'கிறிஸ்து காவியம்' நூல் வெளியீடு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**திருமறைக் கலாமன்றம்.**

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/3798)

---

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
**சுன்னாகம்.**

## வாகன, மிருக வரித் தகடுகள்-1997

## கூறு விலை அறிவித்தல்

1997ஆம் ஆண்டுக்குரிய மேற்படி தகடுகள் செய்து விநியோகிப்பதற்கான கூறு விலைகள் எதிர்வரும் **10 - 01 - 1997** ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**விவரம் வருமாறு:**

(1) துவிச்சக்கரவண்டி தகடு- 3'' நீளம், 1¾'' அகலம், 1997, வ. தெ. பி. ச. து. வ. மற்றும் தொடர் இலக்கம் ஆகியன தகட்டில் பதிக்கப்பட்டு (Embose) இருத்தல் வேண்டும்.

(2) தகட்டின் இடதுபக்க மேல் மூலையில் துவாரம் இடப்படல் வேண்டும்.

(3) ஒவ்வொரு தகட்டின் மேற் புறத்திலும் சிவப்பு வர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) 10,000 தகடுகள் விநியோகிக்கப்படல்வேண்டும். மேலதிக விவரங்களை அலுவலகத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**ஆ. மகாலிங்கம்**
விசேட ஆணையாளர்.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
23. 12. 96 (சி/3790)

---

முதலாவது ஆண்டு

## நினைவலைகள்



### அமரர் சின்னத்துரை செல்லையா

(இளைப்பாறிய பாதுகாவலர்,
ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை)

திதி:- **26 - 12 - 1996**

ஆண்டொன்று தானிங்கு அருளாமல் ஓடியது
தாயான தந்தையான தண் நிழலைத்தானிழந்து
தவிக்கின்ற எம் மனதில் என்றும்
நீங்காது நீங்காது ஐயா! நின் அன்பு முகம்.
உங்கள் ஆத்மா எம்பெருமான் இணையடியில் இணைந்திடப் பிரார்த்திக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

புலவனார் வீதி, சரவணை கிழக்கு,
கல்வியங்காடு. வேலணை.
(44307)

---

உ

## திருவாசக முற்றோதல்

**கோண்டாவில் குமரகோட்டம்**
சித்திவைரவ அம்பாள் ஆலயத்தில்
நாளை வெள்ளிக்கிழமை (27 - 12 - 96)
திருவாசக முற்றோதல்
நடைபெறவுள்ளது.

(44321) **விழா உபயகாரர்**

---

சாவகச்சேரி

## பிரதேசசபை உப அலுவலகம்

**கைதடி/ நாவற்குழி**

## ஆதனவரி அறிவித்தல்

**1997** ஆம் ஆண்டுக்கான ஆதனவரியை **31-01-97** ஆம் திகதிக்கு முன்பாக முழுமையாகச் செலுத்துவோர்களுக்கு அவ்வருட மொத்த வரியில் 10 வீதம் கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டுக்குரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5 வீதம் கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரிகளைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கு 15 வீதமும், வெற்றுக் காணிகளுக்கு 20 வீதமும் வெரியாத்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை **31-01-97** ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பாக முழுமையாக அந்த, அந்த உப அலுவலகங்களிலும் செலுத்தி வரிக் கழிவுகளையும் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**குறிப்பு:**

(1) 1996 ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1997 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக் கொள்ளப்படும்.

(2) சேதமடைந்ததும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் **31-01-1997** க்கு முன் கிடைக்கக் கூடியதாக இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(3) தற்போதைய காலச் சூழ்நிலை காரணமாக வருடாந்த அறிவித்தல் பத்திரங்கள் கிடைக்கத் தாமதமானாலும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொண்டு தங்கள் வரிகளை உரிய காலத்தில் அலுவலகத்தில் செலுத்தி நிர்வாகத்துடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பு. சுந்தரம்பிள்ளை,**
விசேட ஆணையாளர்,
சாவகச்சேரி பிரதேச சபை.

கமநலசேவை நிலையக் கட்டடம்,
கொடிகாமம், 15-12-96. (சி-3795)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கலாநிதி

### ஜெயபவானி நிஹால் இராஜேந்திரா

[முன்னாள் தலைவர், உயிரியற்றுறை, கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்]

தோற்றம்: **05—11—1959** சிவபதம்: **07—01—1996**

**திதி துதியை: 26 - 12 - 1996**

ஆண்டொன்று சென்றாலும் தங்கள் நினைவலைகள் நம்மைவிட்டு அகலா.

**கணவன், மகள் மதுஷிகா,
அம்மா, அப்பா, சகோதரன்,
மாமா, உறவினர்.**

அராலி தெற்கு,
அராலி. (44309)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ...

# உதயன்

## நீளும் தொல்லை

வவுனியாவில் "பாஸ்" வழங்க ஜனவரியிலிருந்து புதிய நடைமுறை.

வெளி மாவட்டங்களில் இருந்து திருகோணமலை நகருக்குள் செல்வோர் ஜனவரி தொடக்கம் தங்கள் அடையாள அட்டைகளை படையினரிடம் ஒப்படைத்து விட்டுத் தான் செல்லவேண்டும்.

யாழ்ப்பாணத்தில், மட்டக்களப்பில் அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை இன்றி வீட்டிலிருந்து புறப்பட்டு அருகில் உள்ள ஆலயத்துக்கும் செல்ல முடியாது.

கொழும்பிலோ தமிழர் ஒருவர் தமது உறவினர் வீட்டில் போய் தங்குவதானாலும், வீட்டு உரிமையாளருடன் பொலிஸ் நிலையத்துக்குக் கூடச்சென்று பதிவு செய்ய வேண்டும். இல்லையேல் சந்தேக நபர் என்ற பட்டி கட்டப்பட்டுக் கைது செய்யப்படுவார்; தடுத்து வைக்கப்படுவார். பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டால் தான் வெளியே வரலாம்.

இவ்வாறாக, தமிழர்கள் தமது சொந்த மண்ணிலும் சரி, பிறபகுதிகளிலும் சரி தேவையில்லாத அசௌகரியங்களையும், வசதியீனங்களையும், வீண் சிரமங்களையும், துன்ப துயரங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது.

சமீபத்தில், வவுனியாவுக்கு விஜயம் செய்துவிட்டுக் கொழும்பு திரும்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், வன்னிப் பகுதியிலிருந்து வந்து அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் திறந்த சிறைக்கூட வாழ்வு நடத்துவதாகக் கருத்து வெளியிட்டிருந்தார்கள்,

வவுனியா அகதி முகாம்களில் அகப்பட்டுள்ள தமிழர்களைப் போலவே, ஏனைய பகுதி வாழ் தமிழ் மக்களும் தங்கள் நாளாந்த வாழ்க்கையை சுதந்திரமாக நடத்த முடியாத அளவுக்கு திறந்த சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள்,

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டே இத்தகைய கட்டுப்பாடுகளை விதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பில் நியாயம் கூறப்படுகின்றது.

ஆனால் பாதுகாப்பு, பந்தோபஸ்து என்ற பெயரில் தமிழர்களை ஒவ்வொரு முனையிலும் அவலப்படுத்துவது, கஷ்டப்படுத்துவது, தொல்லைப்படுத்துவது கால வரம்பின்றி நீளும் போது—

அவற்றை நீக்கி அவர்களின் சுதந்திரமான வாழ்வியக்கத்துக்கு வழி செய்வதில் அக்கறை கொள்ளாமல் ஏனோ தானோ போக்கை, அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் போது —

தமிழர்கள் மீதான அடக்குமுறைகளைக் குறைத்து நீக்குவதற்குப் பதிலாக, வெவ்வேறு வடிவங்களில் அவற்றை நாளுக்கு நாள் மேன் மேலும் பெருக்கும் போது —

அவர்கள் சுதந்திரமில்லாத அடிமைகளாகவே மாற்றப்படுவர். மக்களுக்குப் பாதுகாப்பா அல்லது பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக மக்களா என்ற நிலை வளர்வது ஆரோக்கியமானதல்ல.

ஆருத்ராதரிசனம் காணக் கோயில்களுக்குப் போக முடியாத சைவர்களும், நத்தார் நள்ளிரவுத் திருப்பலி நடத்த முடியாத கிறிஸ்தவர்களும் தமக்குச் சுதந்திரம் உண்டு என்று எப்படி வாய் கூசாமல் சொல்ல முடியும்?

## இந்தியத் தலையீட்டைக் கோரி

# ஈழத் தமிழர் பாதுகாப்புக்கு விசேட மாநாடும்பேரணியும்!

## புத்தாண்டு தினத்தில் சென்னையில்

சென்னை, டிச. 26

பாட்டாளி மக்கள் கட்சி ஏற்பாடு செய்துள்ள ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணியும் மாநாடும் புத்தாண்டு தினத்தில் சென்னையில் நடைபெறும்.

இலங்கை இனநெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக அதில் தலையிடுமாறு இந்த மாநாடு இந்தியாவை வலியுறுத்திக் கோரும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் இந்த மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

மாநாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாநாடு குறித்து பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் —

"இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காடுகளுக்குள் தப்பியோடித் தஞ்சமடைந்திருக்கும் சுமார் ஏழு இலட்சம் தமிழ் மக்களுக்கும் உகந்த உறைவிடம், உணவு, மருந்து வகைகள் மற்றும் உடைகள் கிடைப்பதை உறுதிப்படுத்த இந்தியா தலையிட வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம்." — என்றார்.

அக்டோபர் மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் தமிழ் மக்கள் அனுபவித்த அவலங்களைக் காட்டும் — சி. என். என். மற்றும் பல வெளிநாட்டுத் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பான— விவரணங்களையும் பத்திரிகையாளர்களுக்கு டாக்டர் ராமதாஸ் காட்டினார்.

"ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் கொலை செய்யப்படுகின்ற இந்த மனித உரிமை மீறல்கள் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் எங்கும் காண முடியாதவை" — என்றார் அவர்.

தமிழ்ப்பகுதி நிலைவரங்கள் குறித்து இராணுவத் தரப்பு வெளியிடும் தகவல்களை மாத்திரமே வெளி உலகம் இது வரை அறியக் கூடியதாக உள்ளது. சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகைகளின் பிரதிநிதிகளையும் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்த மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்படும்.

ஈழத் தமிழர்களின் அவலங்களை இந்திய மக்கள் உணர்ந்து விளங்கிக் கொள்வதற்காக பாரதீய ஜனதாக் கட்சி, சிவசேனை உட்பட்ட இந்திய அமைப்புக்களின் தலைவர்கள் பலரையும் இந்த மாநாட்டுக்கு அழைத்திருக்கின்றோம் — என்றும் ராமதாஸ் கூறினார்.

இலங்கைக்கும் — இந்தியாவுக்கும் இடையில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன. ஆனால் ஈழத் தமிழரின் நிலை படுமோசமானது தான் மிச்சம். இலங்கை அரசாங்கமும் தீவிரவாதிகளும் அரசியல் தீர்வு ஒன்றைக் காணக் கூடியதாக இந்தியா தலையிட்டு மத்தியஸ்தம் செய்ய வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் — என்று மேலும் சொன்னார் டாக்டர் ராமதாஸ். (உ)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 26

நேற்று முன்தினம் ஆசிரிய கலாசாலை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்கள் இன்று பிற்பகல் 1–30 மணியளவில் கல்வித் திணைக்களம் வலயம் 1 அலுவலகத்துக்கு தகுந்த ஆவணங்களுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டிருக்கின்றது. (உ)

## சஹபந்துவின் இடத்துக்கு புதியவர்

கொழும்பு, டிச. 26

புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட விசேட அதிரடிப்படைப் பிரிவின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான பதில் தளபதியும் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியுமான உபாலி சஹபந்துவின் இடத்துக்கு விசேட அதிரடிப்படைப் பிரிவின் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியான ஜயந்த கமகே நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னர் விசேட அதிரடிப் படைப்பிரிவின் நிர்வாக மற்றும் குழுக்கள் நிர்வாகப் பணிப்பாளராக கமகே கடமையாற்றியுள்ளார். (உ)

## ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சை;

# 5 லட்சம் மாணவர்களில் 1 லட்சம் பேரே சித்தி!

## யுனெஸ்கோ ஆய்வில் தகவல்

கொழும்பு, டிச. 26

1995 டிசம்பர் மாதம் நடந்த ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சையில் 17.1 சதவீதமான மாணவர்களே முதன் மொழி, கணிதம் ஆகியன உட்பட ஆறு அல்லது ஆறுக்கும் மேற்பட்ட பாடங்களில் சித்தியடைந்துள்ளார்கள்.

4 லட்சத்து 99 ஆயிரம் மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினார்கள். 4 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தப் பரீட்சையில் சித்தியடையவில்லை.

இந்தத் திடுக்கிடும் தகவல் யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் தேசிய கல்வி நிலையம் நடத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றியவர்களில் 8.8 சதவீதத்தினர் மட்டுமே 8 பாடங்களிலும் சித்தியடைந்துள்ளனர். 17.8 சதவீதமான மாணவர்கள் ஒரேயொரு பாடத்தில் மட்டுமே சித்தியடைந்துள்ளனர்.

ஆண்டு 5 மாணவர்களில் கல்வித்திறன், கணிதம், வாழ்க்கைத்திறன் ஆகியவற்றில் நடத்தப்பட்ட தேசிய ஆய்வு ஒன்று மற்றுமொரு திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

21 சதவீதமான மாணவர்கள் மாத்திரமே எழுதக் கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். 13 சதவீதமான மாணவர்கள் மாத்திரமே கணக்கில் தேர்ச்சி பெற்றுள்ளனர். (உ–3)

# ரஷ்யா செல்லவிருந்த எட்டுத் தமிழர் கைது

## கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு, டிச. 26

ரஷ்யா செல்வதற்காக கட்டுநாயக்கா விமானநிலையத்துக்குச் சென்ற எட்டுத் தமிழர்களும், ஒரு ரஷ்ய நாட்டவரும் கடவுச்சீட்டு மோசடி தொடர்பாக கைது செய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ரஷ்ய நாட்டவர் ஒருவரின் பொதிகளை சோதனை செய்த சுங்க அதிகாரிகள், அவரின் பையில் இருந்து 'ரப்பர் ஸ்டாம்' ஒன்றைக்கண்டுபிடித்தனர்.

அதனைத்தொடர்ந்து அவருடன் ரஷ்யா செல்லவிருந்த 8 தமிழர்களின் கடவுச்சீட்டுக்களையும் சோதனையிட்ட சுங்கப்பகுதியினர் அவர்களின் விஸா தொடர்பாகச் சந்தேகம் கொண்டு அவர்களைக் கைது செய்தனர், (உ- 150-3)

## நாளை

**மார்கழி 12**

வெள்ளிக்கிழமை

**திதி:** திருதியை முழுவதும்

**நட்சத்திரம்:** பூசம் பின் இரவு 3.32 வரை.

**ராகுகாலம்:** 10.58-12.28

**சுபநேரம்:** 6.28-7.58

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# வன்னியில் மலேரியா!

வன்னிப் பிரதேசத்தில் மலேரியா மூளை மலேரியா ஆகிய நோய்கள் வெகு வேகமாகப் பரவி வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே நுளம்புப் பெருக்கம் காரணமாக பரவி வந்த இந்த நோய்கள், கடந்த சில நாள்களுக்கு முன்னர் பெய்த பெருமழையினால் மேலும் தீவிரமடைந்திருப்பதாக அறியவருகிறது.

மலேரியா நோயால் பீடிக்கப்பட்ட நிலையில், அண்மையில் நடைபெற்ற ஜி. சீ. ஈ. (சாதாரண தரப்) பரீட்சைக்குத் தோற்றிக்கொண்டிருந்த மாணவர்கள் பலர், பரீட்சை நடுவே மயங்கி வீழ்ந்ததால் அரச, தனியார் மருத்துவமனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

அக்கராயன் குளம், ஒட்டுசுட்டான் அரசினர் ஆஸ்பத்திரிகளில் தினமும் ஆயிரக்கணக்கான நோயாளிகள் பல மணி நேரம் நீண்ட வரிசையில் நின்று சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். அவர்களில் அனேகமானோர் மலேரியா நோயாளிகளாவர்.

இவ்வளவு பெருந்தொகையான நோயாளிகளை ஒரே சமயத்தில் தாம் வரலாற்றில் கண்டதில்லை என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் பெய்த மழையை அடுத்து ஏற்பட்டுள்ள பெரும் நுளம்புப் பெருக்கம்—

மருந்துப் பொருள்களை எடுத்து வருவதற்கான தடை—

போதிய சுகாதார வசதியின்மை—

ஆகியவை காரணமாக வன்னியில் மலேரியா பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் நோயாக உருவெடுத்து வருகின்றது. இதனால் பல மரணங்களும் ஏற்பட்டுள்ளன.

மலேரியாவால் பீடிக்கப்பட்டு மரணமடைந்தவர்களுள் யாழ். பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் வருட மாணவனும், வட்டக்கச்சியை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆறுமுகம் சந்திரகுமார் என்பவரும் ஒருவராவார்.

நோயினால் பாதிக்கப்பட்டு துன்பப்படும் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் முகமாக உடனடியாக அத்தியாயவசிய மருந்துப் பொருள்களையாவது வன்னி இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்கத்துக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

நாவற்குளியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான தம்பிராசா சகுந்தலா (31 வயது) என்பவர் மூளை மலேரியா காரணமாக மல்லாவியில் மரணமானதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இவர் நாவற்குளியிலிருந்து இடம்பெயர்ந்து மல்லாவி செல்வபுரத்தில் வசித்து வந்தார். (அ-உ-117)

## மூவர் கைது

வடக்கே கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்ட பொருள்களைக் கடத்திச் செல்ல முற்பட்ட 3 தமிழர்கள் நேற்று வவுனியா தாண்டிக்குளம் சோதனை நிலையத்தில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தேயிலைப் பொதிக்குள் மோட்டார் சைக்கிள் உதிரிப் பாகங்களைக் கடத்திச்செல்ல முற்பட்ட சாவகச்சேரி வாசியான பாலசுந்தரம்பிள்ளை பாலநாதன், கிளிநொச்சியைச் சேர்ந்த மற்றும் இருவர் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இரு சந்தேக நபர்களும் சவர்க்காரக் கட்டிக்குள் உதிரிப்பாகங்களை மறைத்து வைத்து எடுத்துச் செல்ல முற்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## நெல் உரம்

தென்மராட்சிப் பிரதேச நெற் செய்கையாளர்களுக்கு வழங்கவென 2 ஆயிரம் பைகற் வீ-1, ரி. டீ. எம். உரக் வகைகள் மீசாலை கமநல சேவைநிலையத்திற்கு நேற்று வந்து சேர்ந்தன.

ஏற்கனவே அமோனியா உரம் வழங்கப்பட்ட நெற் செய்கையாளர்களுக்கு இந்த உரவகைகள் இன்று வியாழன் முதல் விநியோகிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் இயங்கும் 500 விபசார விடுதிகள்

## சட்டபூர்வமாக்கக் கோரிக்கை

கொழும்பு, டிச. 26

கொழும்பில் இயங்கும் சுமார் ஐந்நூறு விபசார விடுதிகளுக்கு லைசென்ஸ் வழங்கி அவற்றுக்கும் சட்டபூர்வமான அங்கீகாரம் வழங்க வேண்டும்.

இப்படி கொழும்பு மாநகரசபையைக் கோரும் பிரேரணை ஒன்றுக்கு மாநகரசபை உறுப்பினர் லால் சந்திரசேன முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இந்த விபசார விடுதிகளை அரசாங்கத்தின் மேற்பார்வையில் கொண்டு வருவதன் மூலம் அங்கு தொழில் புரிபவர்களை வாராவாரம் சோதனைக்கு உட்படுத்த முடியும் என்றும் —

அதன் மூலம் 'எயிட்ஸ்' நோய் பரவாமல் தடுக்க முடியும் என்றும் —

அவர் தமது பிரேரணையில் தெரிவித்துள்ளார்.

(உ-3-150)

# சைவ, கிறிஸ்தவ சமய நிகழ்வுகள் நேற்றும் பிந்தின!

யாழ்ப்பாணம்,டிச.26

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அனேகமான சிவாலயங்களில் நேற்று உதயத்துக்குப் பின்னரே ஆருத்திரா தரிசனம் இடம்பெற்றது.

சைவசமய ஆலயக் கிரியை மரபுகளின் பிரகாரம் நேற்று உதயத்துக்கு முன்னர்— அதிகாலை வேளையில்— நடராஜப்பெருமானின் திருநடனமும், ஆருத்திரா தரிசனமும் இடம்பெற்றிருக்க வேண்டும்

ஆனால் ஊரடங்குச் சட்டம் காரணமாக அடியார்கள் அதிகாலை வேளையில் ஆலயத்துக்குச் செல்ல முடியாது என்பதால் மேற்படி சமயக் கிரியைகளை என்றுமே இல்லாதவாறு நேரம் மாறி— பிந்தி— செய்யவேண்டியதாயிற்று என்று ஆலய நிர்வாக வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதே போலவே, நத்தார் விழாவைஒட்டி, தேவாலயங்களில் வழமையாக 24 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு நடைபெறும் பாலன் பிறப்பை ஒட்டிய பூசை— திருப்பலி— உரியவேளையில் நடைபெறவில்லை.

ஊரடங்கு வேளையாதலால், மக்கள் கலந்து கொள்ள முடியாது என்பதால் நள்ளிரவுக்குரிய ஆராதனை நேற்றுக் காலையிலேயே நடத்தப்பட்டது.

எப்போதும் இல்லாதவாறு மனுமகன் யேசுவின் பிறப்பை ஒட்டிய ஆராதனை நேரம் தப்பி— பிந்தி— நடத்தப்பட்டது குறித்து கிறிஸ்தவ மக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது.

(அ-117)

## விமானப்படை தளபதி ஓய்வு

விமானப் படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்க இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகிறார்.

எனினும் தமது சேவையை நீடிக்குமாறு கோரி அவர் அரசுக்கு விண்ணப்பித்துள்ளார் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(உ-10)

### இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதாகவும் அவர் சொன்னார்.

பாப்பரசர் தமது நத்தார் உரையை தமிழ், சிங்களம் உட்பட 55 மொழிகளில் ஆற்றினார். (அ)


**திரு ரியூசன் சென்ரர்**

**ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.**

**A/L 99**

கலை வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்: **28-12-96** சனி காலை **8** மணி

★ வழமையான ஆசிரியர்குழு ★ (44320)



**வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின்**

**விசேட பொதுச்சபைக் கூட்டம்**

காலம்: **27 - 12 - 1996**

நேரம்: முற்பகல் **10** மணி

இடம்: **யாழ்ப்பாண வணிகர் கழகம்**

(221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.)

நிகழ்ச்சிநிரல்

1. தேவாரம்
2. மன்ற கீதம்
3. தலைமையுரை
4. உரிமம் பெறாத மருந்தகங்கள் பற்றிய ஆராய்வும் தீர்மானமும்.
5. அடையாள அட்டை பற்றியது.
6. நிர்வாக சபை உறுப்பினர் ஐவர் மட்டும் தெரிவு.

இக்கட்டான சூழ்நிலையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி தீர்மானிப்பதற்கான கூட்டம் இது. ஆகவே சகலரும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர்** **செயலாளர்**

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம்.

(சி/3799)


### தேவகௌடாவுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

ஆனால் அவர்களின் பேச்சு வார்த்தைக்கான நிகழ்ச்சி நிரல் ஏதும் அறிவிக்கப்படவில்லை.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம், அதில் எழுந்துள்ள புதிய திருப்பங்கள், அவை தொடர்பான இந்தியாவின் நடவடிக்கைகள் — போக்குகள் — ஆகியவை குறித்து இருவரும் பேசுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக விடயமறிந்த அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை ஜனாதிபதியின் இந்திய வருகை பற்றிய செய்திகளுக்கு இந்தியப் பத்திரிகைகள் நேற்றும் முக்கியத்துவம் கொடுத்தன.

அதற்கிடையில் —

இலங்கைச் சிறைகளில் இருக்கும் சுமார் 750 கைதிகளுக்கு நத்தார் பண்டிகையை ஒட்டி மன்னிப்பு அளித்து விடுதலை செய்யும் உத்தரவை அவர் இந்தியாவிலிருந்தபடி கொழும்புக்கு அனுப்பி வைத்தார் என இந்திய வானொலி அறிவித்தது

### மலையக..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான எஸ். சந்திரசேகரன் அரசில் பிரதியமைச்சராக உள்ளார் என்பதும்—

ஆட்சியில் இருக்கும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இணைவதற்கு அவர் இணங்கியதை அடுத்தே நாடாளுமன்றில் பொ. ஐ. மு. ஒரேயொரு மேலதிக பெரும்பான்மை உறுப்பினரின் பலத்தைப் பெற்றுக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கவையாகும்.

(உ-3)

### தெற்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி இந்தத் தேர்தல்களில் போட்டியிடும் தமது முன்னணியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக வடக்கு — கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏழு மாகாணங்களிலும் தலா ஒவ்வொன்றுக்கும் ஏழு பேரைக்கொண்ட ஏழு குழுக்களை நியமித்துள்ளது.

(உ-3-150)

### புலிகள்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைத்ததும் குமார் ரூபசிங்கவின் சமாதானம் பயணம் புத்தாண்டின் முற்பகுதியில் ஆரம்பமாகலாம் என்றும் —

அந்தப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆசியுடன் குமார் ரூபசிங்க முல்லைத்தீவு செல்வார். சமாதான முயற்சி குறித்து விடுதலைப் புலிகள் சாதகமான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பர் என்று அறிய வருகின்றது என்றும் அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

கொழும்பில் உள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இவர், தற்சமயம் அடையாளம் தெரியாத ஓர் இடத்துக்கு இடம்மாறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பயணத்தை ஆரம்பிக்கும் இறுதிக்கட்டத்தில் அவர் உள்ளார் என்றும் —

குமார் ரூபசிங்கவின் சமாதான முயற்சிக்குத் தமிழ்கட்சிகள் சாதகமாகப் பதில் அளித்துள்ளன என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் மூத்த சகோதரியான சுனேத்ராவின் முன்னாள் கணவர் குமார் ரூபசிங்க என்பதும் —

அவர் சந்திரிகாவுடன் நெருக்கமான — அவரின் நம்பிக்கைக்கு உரியவர் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும்.

(உ-3-150)

# நத்தார் தினமான நேற்று ஜெருசலத்தில் நில அதிர்வு!

ஜெருசலம், டிச. 26

நந்தார் தினமான நேற்று ஜெருசலத்தில் பூமி அதிர்வுகள் ஏற்பட்டதாகத் தகவல்கள் கூறுகின்றன.

அந்தப் பூமி அதிர்வு சில விநாடிகள் நீடித்ததாக பல குடும்பங்கள் தொலைபேசி மூலம் தெரிவித்ததாக இஸ்ரேலிய இராணுவ வானொலி கூறியது.

இஸ்ரேலிய பூகர்ப்பவியல் ஆய்வு நிலையம், ஜெருசலத்தில் உண்டானது நிலநடுக்கம் தானா என்பதைக் கண்டறிந்து ஊர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்பட்டது.

யேசு கிறிஸ்து பிறந்த இடமான பெத்தலஹேமில் நிலநடுக்கம் ஏதும் ஏற்படவில்லை என்று பொதுமக்கள் கூறினர். (அ-3)

# பெனாஸிரின் வெளிநாட்டு பயணங்கள் பற்றிப் புகார்

இஸ்லாமாபாத், டிச. 26

பாகிஸ்தானில் முந்திய பெனாஸிர் பூட்டோ அரசாங்கம் செய்துள்ள மேலும் சில வீண் செலவுகளை தற்போதுள்ள பராமரிப்பு அரசு வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

ஊழல் செய்துள்ள அரசியல்வாதிகள் மற்றும் உயர் அரசாங்க அதிகாரிகள் மீது வழக்குத் தொடுப்பதற்கான பரவலான ஏற்பாடுகளை பாகிஸ்தான் அரசு செய்து வருவதாக இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவித்தன.

அரசியலைத் தூய்மைப் படுத்தப்போவதாக தற்போதுள்ள அரசு கூறியுள்ள போதிலும், குறிப்பிட்ட சிலருக்கு எதிராக மட்டுமே குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப் படுவதாகக் கூறப்படுகிறது.

பெனாஸிர் பூட்டோ தமது மூன்றாண்டு பதவிக் காலத்தில் 50 தடவைகள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு, 5 மாதங்கள் வெளிநாடுகளிலேயே தங்கியிருந்து, 50 இலட்சம் டாலர் பொதுப்பணத்தை விரயமாக்கியுள்ளார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தனிப்பட்ட ஆசைக்காகவே இந்த வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார் என்றும் அமைச்சரவை கூறியது. [அ-3]

### கொண்டாட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடன் எடுத்துச் செல்வதையும் —

தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி தீவிரவாதிகள் தாக்குதல் எதையும் நடத்திவிடக்கூடும் என்று கருதி பாதுகாப்பு அதிகாரிகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (உ)

## உகண்டாவில் சண்டை

லண்டன், டிச. 26

உகண்டாவில் அரசுப்படையினருக்கும் ஐக்கிய ஜனநாயக புரட்சிப் படையினருக்கும் இடையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற கடும் மோதல்களில் சுமார் 600 போராளிகள் கொல்லப்பட்டதாக ரொய்ட்டர் செய்திகள் தெரிவித்தன.

(அ-10)

## திராவிடர் மாநாடு

சர்வதேசத் தமிழர்களும் பங்கு பற்றும் மூன்று நாள் திராவிடர் கழக மாநாடு பெரியாரின் நினைவு தினமான நேற்று முன்தினம் சென்னையில் ஆரம்பமானது. (உ-3)

### உள்ளூராட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தலின் போது இருபது வீதமான இடங்களை தமது கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார்.

அது தவிர ,சில குறிப்பிட்ட பிரதேச சபைகள் மற்றும் மாநகரசபைகளில் போட்டியிட்டு தனித்து அச்சபைகளை தமது கட்சி நிர்வகிக்கக் கூடியதாக வேட்பாளர் தெரிவில் இணக்கம் காணப்பட வேண்டும் என்றும் அவர் கோருகின்றார்.

ஆனால் அவரது கோரிக்கைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணங்க மாட்டாது என்றே தெரிவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் குறிப்பிட்டன.

**முஸ்லிம் காங்கிரஸ்**

கிழக்கிலும் மற்றும் பேருவளை, கொழும்பு போன்ற இடங்களிலும் தமது தனித்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் தமது கட்சி தனித்துப் போட்டியிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டும் என பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மற்றொரு கூட்டணிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோருகின்றது.

ஆனால் வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ளூராட்சித் தேர்தல்களில் தனித்துப் போட்டியிடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டாராம்.

**இ. தொ. காங்கிரஸ்**

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் தனித்துப் போட்டியிட உத்தேசித்திருப்பதாகத் தெரிகின்றது.

அரசுக்குள் தமது கட்சிக்கு உரிய மரியாதை வழங்கப்படுவதில்லை என்று அதன் தலைவர் எஸ். தொண்டமான் கருதுகின்றார்.

தமது மக்களின் அவசர அத்தியாவசியப் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசுவதற்கு வாய்ப்பளிக்குமாறு கோரித் தாம் அனுப்பிய கடிதங்களைக் கிடப்பில் போட்டு விட்டுத் தம்மைச் சந்திக்காமல் ஜனாதிபதி ஒதுக்கி வருகின்றார் எனத் தொண்டமான் மனம் புழுங்குகின்றாராம்.

**சமசமாஜக் கட்சி**

அரசின் தனியார் மயப்படுத்தும் கொள்கையால் கோபமுற்றிருக்கும் லங்கா சமசமாஜக் கட்சியும் அரசிலிருந்து வெளியேறப் போவதாக மிரட்டி வருகின்றது.

இது தொடர்பாக அக்கட்சியின் எம்.பியான வாசுதேவ நாணயக்கார சமர்ப்பித்துள்ள யோசனை, அடுத்த வாரத்தில் அக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது.

**மலையக மக்கள் முன்னணி**

அரசில் அங்கம் வகிக்கும் மலையக மக்கள் முன்னணி உள்ளூராட்சித் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என ஏற்கனவே முடிவுசெய்து விட்டது.

மொத்தத்தில் உள்ளூராட்சித் தேர்தல் ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் மேலும் வெடிப்பதைத் தூண்டும் என அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர். (உ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26 - 12 - 1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org